www.tamilarangam.net

## ஒண்ட வந்த பிடாரியே



## ஈழத்தமிழரை விரட்டாதே!

புதிய ஜனநாயகம்

PUTHIYA JANANAYAGAM,
21, Balaji Singh Street,
Saidapet, Madras-600 015.

# வதைபடும் ஈழ அகதிகள்

*உத்தமபாளையம் வட்டத்திலுள்ள பண்ணைப்புரத்தில் இளம்பெண் கற்பழிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து விவசாயிகள் விடுதலை முன்னணி கடந்த 21.7.91 அன்று கம்பம் நகரில் பேருந்து மறியல் போராட்டத்தை நடத்தியது. இதில் பங்கேற்ற 14 வி.வி.மு. தோழர்கள் மதுரை மத்திய சிறையில் 13 நாட்கள் அடைக்கப்பட்டனர். சிறையில், உணவு இடைவேளையின் போது கைதிகளைச் சந்தித்து அவர்கள் உரையாடியபோது, அதிர்ச்சியூட்டும் பல உண்மைகள் தெரியவந்தன. தோழர்கள் எமக்கு அனுப்பிய தகவல்களை இங்கே தொகுத்தளித்துள்ளோம்.*

தற்போது மதுரை மத்திய சிறைக்கு கைதிகளாக ஈழத் தமிழர்கள் ஒவ்வொரு நாளும் வந்தவண்ணம் இருக்கிறார்கள். ஏறத்தாழ 50 பேர்வரை அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களிடம் விவசாயிகள் விடுதலை முன்னணியை அறிமுகப்படுத்தி, அவர்களைப் பற்றி கேட்டபோது அவர்கள் கூறியவை எம் நெஞ்சை உலுக்குவதாக இருந்தது.

ராஜதுரை என்பவர் மூன்று பிள்ளைகளுக்குத் தகப்பனார். இலங்கையிலிருந்து 40.000 ரூபாயுடன் வந்த இவரை தனுஷ்கோடி போலீசார் 19.7.91 அன்று கைது செய்து பணத்தைப் பிடுங்கிக் கொண்டு மூன்று நாட்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு மிருகத்தனமாக சித்திரவதை செய்தனர். பின்னர் 22.7.91 அன்று கோர்ட்டில் ஆஜர் செய்து, உண்மையைப் பேசினால் கொன்று விடுவோம் என்று மிரட்டி அவரை வாயடைத்தனர். பாஸ்போர்ட் இல்லாமல் வந்ததாக கோர்ட்டில் குற்றம் சாட்டப்பட்டு அவர் சிறையிலடைக்கப்பட்டுள்ளார்.

ராஜதுரை ஒரு வருடத்துக்கு முன்பே மனைவி மற்றும் குழந்தைகளுடன் இந்தியாவுக்கு வந்தவர். புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் மோதல் ஏற்பட்ட சமயத்தில் அவர் திருநெல்வேலி - வள்ளியூர் அகதி முகாமுக்கு வந்து சேர்ந்தார். பின்னர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வேலை செய்து வந்தார். இதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்த இயலாமல் போகவே, இலங்கைக்குச் சென்று தனது நிலத்தை அற்ப விலைக்கு விற்றதில் அவருக்குக் கிடைத்ததுதான் இந்த 40.000 ரூபாய். "இத்தொகையை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கும் என் குடும்பத்தாருக்கு நான் என்ன சொலவது?" என்று அவர் வேதனையில் குமுறுகிறார். இரத்தக் கண்ணீர் வடிக்கும் அவருக்கு நாம் எப்படி ஆறுதல் கூறுதென்றே தெரியவில்லை.

செல்வம் என்பவர் தன் மனைவி மற்றும் ஒரு பெண் குழந்தையுடன் கரை வந்தவர். அவரை மண்டபம் போலீசார் கைது செய்து, "உன் மனைவியை இன்று மட்டும் அனுப்பு: உன்னை விட்டு விடுகிறோம்" என்றனராம். இதற்கு இணங்க அவர் மறுக்கவே, அவரை ஒற்றைக்கண் சிவராசனுடன் தொடர்புள்ளவர் என்று பொய்க் குற்றம் சாட்டி சிறையிலடைத்துள்ளனர். "எங்களது உயிரும் மானமும் இரக்கமில்லாமல் பறிக்கப்படும்போது, சிங்கள அரசுக்கெதிராக இறுதிச் சொட்டு இரத்தம் உள்ளவரை போராடி வீர மரணமடையாமல் வந்த என்னைப் போன்றவர்களுக்கு இந்த தண்டனை தேவைதான்" என்று தன்னைத்தானே நொந்து கொண்டு அவர் விம்மினார்.

இதேபோல ஒவ்வொரு ஈழத் தமிழருக்குப் பின்னால் எத்தனையோ சோகங்கள்!

— விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட ஒருவருடன் உரையாடியபோது, இந்தியாவின் உளவு நிறுவனமான "ரா" (RAW) புலிகளையும், ஈழ விடுதலைப் போராட்டத்தையும் சீர்குலைத்தது என்றார். "இந்திராவின் ஆட்சிக் காலத்தில் சீக்கியர்களுக்கு எதிரான பொற்கோவில் நடவடிக்கையில் நாங்களும் ஈடுபடுத்தப்பட்டு, தாக்குதல் நடத்தினோம்" என்று இதுவரை கேட்டிராத செய்தியைக் கூறினார். லண்டனிலிருக்கும் கிட்டுவுக்கு புலிகள் இயக்கத் தலைமை மரண தண்டனை விதித்துள்ளதாகச் சொன்னார். இலங்கையில் ஜே.வி.பி. இயக்கம் வளர்ந்து வருவதாகவும், 18 வயதாகும் இளைஞர்கள்தான் அதன் தலைவராக உள்ளார் என்றும் கூறினார். அரசியல் பிரச்சாரம் இல்லாமல் வெறும் ராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டதால் ஈழத்தமிழர்களிடம் புலிகள் தனிமைப்பட்டுப் போயுள்ளதாக ஒப்புக் கொண்டார்.

சிறையில் பலதரப்பட்ட ஈழத் தமிழர்களுடன் நாங்கள் உரையாடினோம். அவர்களது அவலத்தை விவரிக்க பக்கங்கள் போதாது. வந்தாரை வாழ வைக்கும் செந்தமிழ் நாட்டை நம்பி அகதிகளாய் வந்த ஈழத் தமிழர்கள், இன்று சிறைக் கொடுமைக்கும் சித்திரவதைக்கும் ஆளாகி அல்லற்படுவதைப் பார்த்து எங்கள் கண்கள் குளமாயின. ஈழத் தமிழர்கள் நமது மண்ணில் நாதியற்றவர்களாக, அடக்குமுறைக்கு ஆளாகி நிற்பதை ஒருக்காலும் அனுமதிக்க முடியாது.

இக்கொடுமைகளுக்கு எதிராகத் தொடர்ந்து போராடுவோம் என்று உறுதியளித்துவிட்டு, ஈழத் தமிழர்களின் அவலத்திற்குக் காரணமான ஆளும் கும்பல்கள் மீது வெஞ்சினத்தை நெஞ்சில் தேக்கி, சிறையில் வாடும் ஈழத் தமிழர்களிடம் பிரியாவிடை பெற்று நாங்கள் திரும்பினோம்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## விடுதலைப் புலிகளின் இழிசெயல்:

# ராஜீவ் கொலைக்கு புதிய ஜனநாயகம் - புதிய கலாச்சாரம் மீது வீண்பழி!

ராஜீவ் காந்தி கொலைக்கான "பழி"யை புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் ஆகிய பத்திரிக்கைகள் மீதும் அவற்றைச் சார்ந்த புரட்சியாளர்கள் - அமைப்புக்கள் மீதும் சுமத்தும் வெட்கக்கேடான இழிசெயலில் விடுதலைப் புலிகள் இறங்கியுள்ளனர். விடுதலைப் போராளிகளுக்குரிய தகுதியையும் மரியாதையையும் அவர்கள் இழந்து போவதைத்தான் இது குறிக்கிறது.

குண்டு வெடிப்பில் ராஜீவ் கொல்லப்பட்ட நாளில் இருந்து பலரது கவனமும் சந்தேகமும் ஈழ விடுதலைப் புலிகள் மீதுதான் குவிந்தது. தாங்கள் அதைச் செய்யவில்லை என மறுத்ததோடு புலிகள் நிற்கவில்லை. இலங்கை அரசோ, ஈழ துரோகக் குழுக்களோ, இந்திய இராணுவத்தால் பாதிப்புக்குள்ளான பெண்ணோ ராஜீவைக் கொன்றிருக்கலாம் என்று லண்டனில் உள்ள புலிகளின் அதிகாரப் பூர்வ அறிவிப்பாளர் கிட்டு கூறினார். இந்தியாவில் அரசமைப்புக்குப் பகைமையாக உள்ள பல சக்திகளில் ஏதாவது செய்திருக்கலாம் என்று யாழ்பாணத்தில் பேட்டியளித்தனர் புலிகளின் அரசியல் பிரமுகர்களான ஆண்டன் பாலசிங்கமும், யோகியும். கொலையாளிகளைக் கண்டுபிடிப்பதில் தாங்களும் உதவுவதாக முன்வந்தார் கிட்டு.

ஜூன் 11ந் தேதி இந்தியன் எக்ஸ்பிரஸ் - தினமணி நிருபருடன் லண்டனில் இருந்து தொலைபேசியில் பேட்டி கொடுத்த கிட்டு பின்வருமாறு கூறியுள்ளார். "தமிழ்நாட்டில் சில தீவிரவாதக் குழுக்கள் செயல்படுகின்றன. அவை அதிகாரப் பூர்வ பத்திரிக்கைகள் கூட நடத்துகின்றன. புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் ஆகிய அத்தீவிரவாதப் பத்திரிக்கைகள் லண்டனில் கூட விநியோகிக்கப் படுகின்றன. ராஜீவின் கொலைகாரன் என்று சந்தேகிக்கப்படும் "குர்தா" அணிந்த ஆசாமி அந்தப் பத்திரிக்கைகளின் நிருபர்களில் ஒருவராக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அந்த ஆள் இலங்கைக்காரன் போலத் தெரியவில்லை; பரிச்சயமானதாகவும் அவன் முகம் இல்லை. கொலைகாரியான கருத்தப் பெண் யாழ்ப்பான பாணியில் தலையலங்காரம் செய்திருந்தாலும் வேண்டுமென்றே அப்படிச் செய்திருக்க வேண்டும். மற்றபடி அவள் தமிழ் நாட்டுப் பெண் போலத்தான் தெரிகிறாள்" என்று கிட்டு தனது பேட்டியில் கூறியுள்ளார்.

கிட்டுவின் பேட்டி பகுத்தறிவு நாடகமாடும் - புலிகளின் துதிபாடும் தி.க. "விடுதலை" உட்பட வேறு சில தமிழ் நாளேடுகளிலும் வெளிவந்துள்ளது. ஆனால், அது வெளியான அன்றிலிருந்து ராஜீவ் கொலையில் ஈழத் தமிழர் சிலரோடு சம்பந்தப்பட்டிருப்பதாக சென்னைவாசிகள் சிலரைக் கைது செய்வது தொடருகிறது. அது வேறு விசயம்.

இதுபோன்று வீண்பழி - அவதூறு சுமத்தப்படுவதும், தாக்கப்படுவதும் நமது அமைப்புக்கும் தோழர்களுக்கும் புதிதல்ல. அரியலூர் - மருதையாற்று பாலம் குண்டு வெடிப்பு - ரயில் கவிழ்ப்பு, திருவையாறு பாலம் குண்டுவெடிப்பு, திருச்சி - நேரு சிலையும் தஞ்சை நினைவுச் சின்னமும் தகர்ப்பு, பட்டுக்கோட்டை வட்டாரத்தில் வாகனங்களுக்குத் தீவைப்பு ஆகியளவற்றிலும் இவ்வாறு நடந்துள்ளது. நமது தோழர்கள் இந்தச் சம்பவங்களில் சம்பந்தப்படவில்லை என்று தெரிந்து, அவர்கள் சந்தேகிக்கும் நபர்களைக் காட்டிக் கொடுக்கும்படி நிர்பந்தித்து, துன்புறுத்தியபோது நமது தோழர்கள் மறுத்தே வந்திருக்கிறார்கள்.

ஆனால், விடுதலைக்குப் போராடுவதாகக் கூறும் புலிகள் ஏன் இத்தகைய இழிசெயலில் ஈடுபட வேண்டும்? அவர்களது பாசிச அரசியலும், அதை நாம் விமர்சித்து வருவதும் தான் காரணம். புலிகளின் இச்செயல் குறித்து நாம் வருந்தவோ அஞ்சவோ போவதில்லை. உண்மையில் நமக்கு அதிர்ச்சியூட்டுவது என்னவென்றால், தீங்களை மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்கள் எனக் கூறிக்கொண்டு புலிகளை ஆதரித்து வரும் இங்குள்ள சிலர் அவதூறை ஏதாவது ஒரு வகையில் நியாயப் படுத்துவதுதான்! இறுதியில் நேர்மையான, புரட்சிகர அரசியலே வெல்லும்; இத்தகைய அவதூறுகளும் சதிகளும் வெல்ல முடியாது என்ற நம்பிக்கையோடு நமது பணியைத் தொடருவோம்!

— ஆசிரியர் குழு

## தமிழக நாளேடுகளுக்குத் தரப்பட்ட

# மறுப்பு அறிக்கை

இன்றைய இந்தியன் எக்ஸ்பிரஸ் (12.6.91) நாளேட்டில், விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கிட்டு அவர்கள் கூறியதாக ஒரு செய்தி வெளியாகியுள்ளது. ராஜீவ் கொலை தொடர்பாகத் தேடப்படும் குர்தா அணிந்த நபர் "புதிய கலாச்சாரம்" அல்லது "புதிய ஜனநாயகம்" பத்திரிகைகளைச் சேர்ந்த செய்தியாளராக இருக்கக்கூடும் என்று கிட்டு அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கிட்டுவின் கூற்றை நாங்கள் வன்மையாக மறுக்கிறோம். ராஜீவின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளையும், இலங்கைக்கு இந்திய ராணுவத்தை அனுப்பியதையும் நாங்கள் எதிர்த்தோம்; எதிர்க்கின்றோம். ஆனால், தனிநபர் கொலைகளின் மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற கொள்கையில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. கிட்டு குறிப்பிட்டுள்ளதைப் போல எங்களது நபர்கள் யாரும் செய்தி சேகரிக்கும் நோக்கத்துக்காகக் கூட ஸ்ரீபெரும்புதூர் செல்லவில்லை. அத்தகைய தோற்றம் கொண்ட நபர்களும் எம்மிடம் யாருமில்லை. இருப்பினும் எமது பத்திரிகைகளுக்கு எதிராக கிட்டு உள்நோக்கத்துடன் அவதூறு செய்துள்ளார்.

ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை முற்றிலும் சரியானதென்று ஆதரிக்கும் அதே சமயம், ஈ.பி.ஆர்.எல்.எஃப், டெலோ, பிளாட் போன்ற இந்திய அரசு ஆதரவு அமைப்புகளின் துரோகத்தையும், விடுதலைப் புலிகளின் பாசிச நடவடிக்கைகளையும் தொடர்ந்து எமது பத்திரிகைகளில் எதிர்த்து எழுதி வருகிறோம்.

குறிப்பாக, புலிகள் ஈழ விடுதலைக்காகப் போராடும் சிறிய ஜனநாயக அமைப்புகளைத் தடை செய்து ஒடுக்குகின்றனர். சிங்கள சிவிலியன்களையும், ஈழ முஸ்லீம்களையும் கொலை செய்கின்றனர்; ஈழ முஸ்லீம் மக்களை ஈழத்திலிருந்து விரட்டியடிக்கின்றனர். ராஜனி திரணகம போன்ற ஜனநாயக சக்திகளைக் கொலை செய்கின்றனர். புலிகளின் இத்தகைய பாசிச நடவடிக்கைகளைத் துவக்கமுதலே நாங்கள் எதிர்த்து வருகிறோம். உலகம் முழுவதும் வாழும் ஈழத்தமிழர்கள் மத்தியில் எமது பத்திரிகைகள் பெரும் ஆதரவு பெற்றுள்ளன. இதனால் ஆத்திரமுற்று எமது வாசகர்களையும், புலிகளுடன் உடன்படாத ஈழ அகதிகளையும் வெளிநாடுகளில் கூட புலிகள் தாக்குகின்றனர்; மிரட்டுகின்றனர்.

ஏற்கனவே "புதிய கலாச்சாரம்", "புதிய ஜனநாயகம்" ஏடுகள் மீது ஆத்திரம் கொண்டுள்ள கிட்டு, இப்போது ராஜீவ் கொலையுடன் எம்மைச் சம்பந்தப் படுத்திப் பொய்ப் பிரச்சாரம் செய்கிறார். முழுவதும் உள்நோக்கம் கொண்ட கிட்டுவின் கூற்றை வன்மையாகக் கண்டிக்கிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலிகளின் பாசிசத்துக்கு எதிராக, அதற்கு மாற்று அமைப்பாகக் கூறிக் கொள்ளும் "பிளாட்" (PLOT) துரோகக் கும்பல் இந்திய - இலங்கை பாசிஸ்டுகளின் காலை நக்கிக் கொண்டு தனது இருப்பை தக்கவைத்துக் கொள்ள முயன்று வருகிறது. அதன் துரோகத்தை அம்பலப்படுத்தி "பிளாட்"டிலிருந்து வெளியேறியோர் அண்மையில் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரம் இது.

•

தமிழீழ விடுதலைப் போராட்டமானது ஆரம்பிக்கப்பட்டு ஆயுத வடிவங்களே போராட்ட வடிவங்கள் என்னும் இன்றைய நிலைவரை, எமது விடுதலைப் போராட்டத்தில் தமது உயிரை நம்பிக்கைகளுடன் இழந்து போயுள்ளவர்கள் பலர். இதில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் (PLOT - பிளாட்) தம்மை இணைத்துக் கொண்டு பயிற்சிப் பாசறைகளிலேயே புதையுண்டு போன ஆயிரக்கணக்கான போராளிகளின் கனவுகள் - எதிர்பார்ப்புகளைக் குழிதோண்டிப் புதைத்த பெருமை உமாமகேஸ்வரன் கும்பலையே சாரும். இந்த தலைமையின் அரசியல் ஓட்டாண்டித்தனத்தால், இவ்விளைஞர்களின் கருத்துக்களும் முனகல்களும் எழுந்த போது அதற்குப் பதிலாக உமா கும்பல் படுகொலைகளையே பரிசாகக் கொடுத்தனர். இந்த வகையில் 500-க்கும் மேற்பட்டோரை இந்திய மண்ணில் கொன்று புதைத்தும் ஈழ மண்ணில் மென்டிஸின் தலைமையில் பல இளைஞர்களைக் கொன்றும் ஒழித்தனர்.

இன்று புலிகளின் (LTTE) அடக்குமுறைகள் பாசிச வழிமுறைகளை அடைந்துள்ளது. தமிழீழ மக்களின் கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திரத்தை முற்றாக மறுத்து, மக்களின் வாழ்வை மரணத்தின் விளிம்பிற்குள் தள்ளிய புலிகளுக்கு எதிராகப் போராடுவதாகச் சொன்ன பிளாட் கும்பல், இந்தியாவிலும் இலங்கையிலும் தமது இயக்கத்தினுள் தமது இயக்கத்தின் கருத்து - எழுத்து சுதந்திரத்திற்காகப் போராடிய தோழர்களைக் கொன்றொழித்தது. இதுமட்டுமின்றி எல்.டி.டி.ஈ., ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எஃப்., டெலோ போன்ற அமைப்புகளைச் சேர்ந்த போராளிகளையும் எல்.டி.டி.ஈ. பாணியிலேயே கொன்று குவித்தது.

நடுவீதியில் அநாதைப் பிணமாகக் கிடந்த உமாமகேஸ்வரனுக்கு அஞ்சலி செலுத்தும் உமாவின் கொலைகார சகாக்கள் புலிகளின் பாசிசத்தை மட்டும் சொல்லி, தாங்கள் இன்று இலங்கை இராணுவத்தின் கால்களை நக்கிப் பிழைப்பதை மறைக்க முயல்கின்றனர்.

இவர்கள் தமது அராஜகத்தினால் கொல்லப்பட்ட எமது தோழர்களுக்கும் மக்களின் படுகொலைக்குமான அஞ்சலியை நிராகரிக்க முடியுமா?

அவர்களின் லட்சியங்கள் ஒருநாள் முளைவிடத்தான் செய்யும்.



இத்தனைக்கும் இவர்கள் செய்த குற்றம் தான் என்ன?

இந்திய அரசின் கெடுபிடி, இலங்கை அரசின் ஒடுக்குமுறை, புலிகளின் ஜனநாய மறுப்பு, மற்ற பெரிய இயக்கங்களின் அட்டகாசம் என்பவனற்றின் மத்தியிலும் சொந்த மண்ணில் வாழ்ந்தார்கள்; விடுதலையை நேசித்தார்கள்.

இதுதான் இவர்கள் செய்த குற்றமா?

நாட்டின் தலைவிதியை எண்ணி ஏங்கும் நெஞ்சங்களே,

மக்களின் உண்மையான விடுதலைக்கான முனைப்புகள் உயிருள்ளவை என்ற உண்மையை உணருங்கள்.

இந்த முனைப்புகளுக்கு புலிகள் தடையாக இருக்கிறார்கள் என்பதை உணருங்கள்.

உண்மையை உணர மறுப்பது, 'சோலி வேண்டாம்' என்ற மனோபாவம் என்பவனற்றிலிருந்து நாம் வெளியே வரவேண்டியுள்ளது என்பதை உணருங்கள்.

காலம் காலமாக பல நல்ல சக்திகளைத் தமிழினம் இழந்து கொண்டு வருகிறது. இதைக் கேட்டுப் பழகிப் போனவர்களாக ஆகிவிடாமல், இவற்றைத் தடுக்க உங்களால் இயன்ற அனைத்தையும் செய்யுங்கள்

— நண்பர்கள் (ஈழம்)



# புலிகளின் ஜனநாயக விரோதப் போக்கு

இலங்கையின் இனவெறி ஆட்சியாளர்கள் தமக்கிடையே பிளவுண்டு பலவீனப்பட்டுவரும் இவ்வேளையில் பரந்துபட்ட இனவெறி எதிர்ப்பு ஜனநாயக சக்திகளை ஒன்றுதிரட்ட வேண்டிய கடமை இலங்கையின் போராளி அமைப்புகளின் முன் இருக்கிறது. தமிழர் பகுதிகளில் இன்று ஆதிக்கம் பெற்றிருக்கும் விடுதலைப் புலிகளோ இதற்கு நேரெதிரான திசையில் நடந்து வருவதாக தொடர்ந்து இலங்கையிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இலங்கை மக்களின் விடுதலைக்காக உரிமைகளுக்காக குரல் கொடுத்துவரும் புரட்சிகர, ஜனநாயக சக்திகளை விடுதலைப்புலிகள் குறிவைத்துத் தாக்குவதையும், தம்மைத் தவிர்த்த அரசியல் இயக்கங்கள் எதுவும் கூடாது என்ற ஜனநாயகவிரோதப் போக்கில் அவர்கள் நடந்துகொள்வதையும் இச்செய்திகள் அம்பலப்படுத்துகின்றன. இந்திய விரிவாதிக்கவாதிகளையும், இலங்கை இனவெறி பாசிச அரசையும் எதிர்த்து விரிவான அளவில் புரட்சிகர, ஜனநாயக சக்திகள் அணிதிரள்வதற்குத் தடையெழுப்பும் புலிகளின் தவறான அரசியல்போக்கு, இலங்கைப் போராட்டத்தில் அக்கறையுள்ள அனைவராலும் கண்டிக்கப்பட வேண்டும்.

ஈழ நண்பர்கள் இது தொடர்பாக அனுப்பியுள்ள இரு பிரசுரங்களும், யாழ் - பல்கலைக் கழக மாணவர்களின் எதிர்ப்புக்குரல்களும் இங்கே வெளியிடப்படுகின்றன.

## தோழர் கேசவன் கடத்தப்பட்டார்

ஈழத்தில் தீப்பொறி அமைப்பை நிறுவியவர்களில் ஒருவரான கேசவன் உட்பட மொத்தம் 10 பேர் அண்மையில் புலிகளினால் 'கைது' செய்யப்பட்டுள்ளனர்.

மே 17-ந் தேதி நள்ளிரவு சீருடையிலும், ஆயுதபாணிகளாகவும் காணப்பட்ட புலிகள், கேசவன் தங்கியிருந்த வீட்டைச் சுற்றி வளைத்து கேசவனை 'கைது' செய்தனர். இதைத் தொடர்ந்து மே 21-ந் தேதி நள்ளிரவில் மீரா உட்பட 4 பெண்களும், யாழ் பல்கலைக் கழக மாணவர்களான சிறீநிவாசன் (கல்விப்பீடம் 2-ம் வருடம்) கோவிந்தராசன் (கலைப்பீடம் 3-ம் வருடம்) ஆகியோரும் இன்னும் 2 மாணவர்களும் (பெயர் தெரியவில்லை) புலிகளால் பிடித்துச் செல்லப்பட்டனர். மேலதிக உதவி அரசாங்க அதிபராக இருந்த கோவிந்தன் என்பவரும் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஈழத்து தமிழ் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவரான கேசவன் (நோபேட், கோவிந்தன், டொமினிக் என்ற பெயர்களிலும் அழைக்கப்பட்டவர்.) மலையகத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். 70-களில் கலை இலக்கியப் பத்திரிகைத்துறையில் உழைத்தவர். அற்புதமான சிறுகதைகளை "தீர்த்தக்கரை" எனும் பத்திரிகையில் எழுதியவர். 80-களில் பிளாட் (PLOT) அமைப்பில் இணைந்து கொண்டு உழைத்தவர். தள பொறுப்பாளராகவும் செயல்பட்டவர். பின் பிளாட்டின் உட்கட்சி அராஜகம், படுகொலைகளினால் வெளியேறி "தீப்பொறி" அமைப்பினை நிறுவியவர். புகழ்பெற்ற "புதியதோர் உலகம்" நாவலையும் இக்காலப் பகுதியிலேயே எழுதினார்.

இவர்களைக் கைது செய்யும்போது, "எங்களை மீறி வேலை செய்யக்கூடிய எவ

Page → 4



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரையும் விட்டு வைக்கமாட்டோம். தீப்பொறியை முக்கியமான சக்திகளில் ஒன்றாகக் கருதுகின்றோம். எனவே உங்களைக் கைது செய்கின்றோம்'' எனப் புலிகள் கூறியுள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்களைக் கைது செய்த பின்னர் பல்கலைக் கழகத்தில் புலிகள் கூட்டமொன்றைக் கூட்டினர். அங்கு பேசிய புலி பிரமுகர் ஒருவர் ''கைதான மாணவர்கள் மீது பொய்க் குற்றச் சாட்டுகள் பலவற்றைக் கூறினார். பின்னர் கூட்ட முடிவில், ''கைதானவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்பட வேண்டும்?'' என மாணவர்களைக் கேட்டார். நீண்ட நேர மௌனத்திற்குப் பின் மாணவர் ஒருவர் துணிச்சலுடன் எழுந்து ''இவர்களை மன்னித்துவிட முடியாதா?'' எனக் கேட்டார். இதற்கு எவ்வித பதிலும் இல்லாமல் கூட்டம் முடிக்கப்பட்டது.

இக் 'கைது' பற்றி தமது பத்திரிக்கையில் எழுதிய புலிகள், ''பிடிபட்டவர்கள் பிளாட் துரோகக் கும்பலைச் சேர்ந்தவர்கள்' என அப்பட்டமாகக் பொய்க்காரணம் காட்டியுள்ளனர். புலிகளால் பிளாட் தடைசெய்யப்படு முன்னரே பிளாட்டின் அராஜகப் போக்குகளால் அதிலிருந்து வெளியேறியவர் கேசவன். பிளாட்டுக்கு தலைமறைவாக இருந்து கொண்டே 1985-ம் ஆண்டின் முற்பகுதியில் பிளாட் மீதான மாயையுள் இருந்த மக்கள் மத்தியில் அதன் அராஜகப் போக்கை அம்பலப்படுத்தும் கடினமான முயற்சியில் ஈடுபட்டவர். 'தீப்பொறி' பத்திரிக்கையின் இரண்டு இதழ்களினூடாகவும், 'புதியதோர் உலகம்' நாவல் மூலமாகவும் பிளாட்டின் அராஜகப் போக்கை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தவர். இதை மக்களும் அறிவர்; புலிகளும் அறிவர்;

இப்படியிருக்க இவர் பிளாட் அமைப்பைச் சேர்ந்தவரென காரணம் கற்பிட்டது விஷமத்தனமானது. தமது உள்நோக்கம் கொண்ட செயலை வெளியில் நியாயப்படுத்துகின்ற முயற்சியே இது.

ஜூனில் யுத்தம் ஆரம்பமானதிலிருந்து இன்று வரை என்.எல்.எஃப்.டி., தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை, பி.எல்.எஃப்.டி., தீப்பொறி அமைப்புகளைச் சேர்ந்த, சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்களும் மற்றும் இயக்கங்களிலிருந்து வெளியேறியிருந்தவர்கள், எதுவுமே அறியாதவர்கள்... என எல்லோருமாக சுமார் 200-க்கும் மேற்பட்டோரும் புலிகளால் கடத்தப்பட்டு காணாமற் போயுள்ளனர். யாழ் பல்லைக்கழக மாணவன் விமலேஸ்வரன் படுகொலையிலிருந்து இன்றைய ''கைதிகள்'' வரை பிடிபட்ட / கொல்லப்பட்ட எவருமே இலங்கை அல்லது இந்திய அரசுக்கு சார்பானவர்கள் அல்ல என்பதும், எவ்வகையிலும் 'துரோகிகள்' எனப்பட்டம் சூட்ட முடியாதவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்கள் உயிரோடு இருக்கிறார்களா? இல்லையா? எங்கு 'சிறை' வைக்கப் பட்டிருக்கிறார்கள் என்பது இவர்களது பெற்றோர், உறவினர்களுக்குக்கூட தெரிய வருவதில்லை.

மக்கள் நலன், மாணவர் நலன் கருதிப் பாடுபட்ட
யாழ் பல்கலைக்கழக மாணவர்
விமலேஸ்வரன்
விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்



விடுதலை பேசிய விரல்களே விசையை அழுத்தின
இன்று நான் கொல்லப்பட்டேன்.

T விமலேஸ்வரன் (பிறப்பு: 1963. படுகொலை ஜூலை 1988)

## நிலைத்திருக்கும் நினைவுகள்!

எம்மை விட்டுப் பிரிந்த நண்பன் விமலேஸின் பல்கலைக் கழக பாதைச் சுவடுகள் மக்கள் நலன்களை, மாணவர்களின் நலன்களை, கருத்தில் கொண்டொழுகும் எந்தொரு மாணவனாலும், மாணவியினாலும் பாதையாக கொள்ளத்தக்கவை.

நண்பன் விமலேஸ்வரனின் சாந்தமான மனப்பாங்கும் இனிமையான சொல் வளமும் எதனையும் சிந்தித்து செயல்படும் திறனும், எதற்கும் அஞ்சாத மனத் துணிவும் ஒற்றுமையே வேண்டும் என்ற அவனின் கொள்கையும் எங்களால் என்றும் மறக்க முடியாதன மட்டுமன்றி எவராலும் மறுதலிக்கவும் முடியாதன.

படிப்பை மட்டுமன்றி பாட்டாளி மக்களுடன் மக்களாக எமது இன விடுதலையும் கருத்தில் கொண்டவனாக இருந்தான். பல்கலைக்கழகம் மேற்கொண்ட அனைத்துப் போராட்டங்களிலும் முழுமனதோடு பங்கேற்றான். ஆனால் நாம் இன்று விமலேஸ்சை இழந்து நிற்கின்றோம்.

யாழ் பல்கலைக்கழக
மாணவர்கள் சார்பாக,
கலைப்பீட மாணவர்கள்.'

இத்தனைக்கும் இவர்கள் செய்த குற்றம்தான் என்ன?

இந்திய அரசின் கெடுபிடி, இலங்கை அரசின் ஒடுக்குமுறை, புலிகளின் ஜனநாயக மறுப்பு, மற்ற பெரிய இயக்கங்களின் அட்டகாசம் என்பனவற்றின் மத்தியிலும் சொந்த மண்ணில் வாழ்ந்தார்கள்; விடுதலையை நேசித்தார்கள்.

இதுதான் இவர்கள் செய்த குற்றமா?

நாட்டின் தலைவிதியை எண்ணி ஏங்கும் நெஞ்சங்களே,

மக்களின் உண்மையான விடுதலைக்கான முனைப்புகள் உயிருள்ளவை என்ற உண்மையை உணருங்கள்.

இந்த முனைப்புகளுக்கு புலிகள் தடையாக இருக்கிறார்கள் என்பதை உணருங்கள்.

உண்மையை உணர மறுப்பது, 'சோலி வேண்டாம்' என்ற மனோபாவம் என்பவைவற்றிலிருந்து நாம் வெளியே வரவேண்டியுள்ளது என்பதை உணருங்கள்.

காலம் காலமாக பல நல்ல சக்திகளைத் தமிழினம் இழந்துகொண்டு வருகிறது. இதைக் கேட்டுப் பழகிப் போனவர்களாக ஆகிவிடாமல், இவற்றைத் தடுக்க உங்களால் இயன்ற அனைத்தையும் செய்யுங்கள்.

— நண்பர்கள் (ஈழம்)

கேடயம்

எந்நேரத்திலும் கொல்லப்படக்கூடிய சூழலில் இருந்து வரும் இப்பிரசுரத்தை இயன்றவரை பரவச் செய்யுங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தொடரும் கடத்தல்கள்...

தீப்பொறி அமைப்பை ஸ்தாபித்தவர்களில் ஒருவரான கேசவன், பல்கலைக் கழக மாணவர் இருவர் உட்பட 10 பேர் மே மாதம் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு, அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரிவதற்கு முன் மீண்டும் 4 பேர் புலிகளால் கடத்தப்பட்டுள்ளனர்.

கடந்த ஒகஸ்ட் 30 ஆம் திகதியன்று யாழ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த த.செல்வநிதி, மனோகரன், இன்னொரு பெண் (பெயர் தெரியவில்லை) உட்பட வவுனியா மாவட்டப் பாடசாலையொன்றின் ஆசிரியர் தில்லைநாதன் ஆகியோரே புலிகளால் கடத்தப்பட்டோராவர்.


கவிஞரும், பெண்ணிலைவாதியுமான த.செல்வநிதி (செல்வி, தமயந்தி என்ற பெயர்களாலும் அழைக்கப்படுபவர்) கலைப்பீட 3-ஆம் வருட மாணவியாவார். "சொல்லாத சேதிகள்" என்ற கவிதைத் தொகுதியில் வரும் கவிஞர்களில் ஒருவரான இவர் யாழ் பெண்கள் ஆய்வு வட்டத்தின் உறுப்பினரும் ஆவார். யுத்தத்தினால் அநாதைகளாக்கப்பட்ட பெண் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக ஏற்கெனவே புலிகளால் கொல்லப்பட்ட விரிவுரையாளர் ராஜனி திராணகமவால் ஸ்தாபிக்கப்பட்ட "பூரணி" பெண்கள் நிலையத்தின் பராமரிப்பாளர்களில் ஒருவராகவும் விளங்கினார். இப்பூரணி நிலையமும் ஏனைய பொது நிறுவனங்களைப் போலவே புலிகளால் 'விழுங்கப்பட்டது' தெரிந்ததே.


செல்வி, புளொட்டின் உட்கட்சி ஜனநாயக மறுப்பு நடவடிக்கைகள் காரணமாக தான் அங்கம் வகித்த அதன் பெண்கள் அமைப்பிலிருந்து ஒதுங்கினார். "தோழி" என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்த செல்வி புளொட்டின் பெண்கள் அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவராவர்.

30 ஆம் திகதி செல்வி தங்கியிருந்த வீட்டிற்குச் சென்ற புலிகள் தாம் அவரை ஒன்றரை மணிநேரத்தில் 'விசாரித்துவிட்டு' விடுவதாகக் கூறி அழைத்தார்கள். வீட்டார் அனுப்ப முடியாது என மறுக்கவே அவரைப் பலவந்தமாக இழுத்துச் சென்றுள்ளனர். நாடக அரங்கவியல் விசேட பட்டப்படிப்பு மாணவியும், நாடகங்களில் ஆர்வமுடன் பங்கேற்று நடிப்பவருமான செல்வி, பெண்கள் சம்பந்தமான பெங்களூர் மகாநாட்டிற்கு மறைந்த பெண்ணிலைவாதியும், கவிஞருமான சிவரமணியுடன் சென்று கலந்துகொண்டவர். ஆனால் புலிகளோ, தம்மைப் பற்றிய தகவல்களை வெளியிலுள்ள பத்திரிகையாளர்கட்கு அனுப்புபவர் என்றும், கிறிஸ்தவ நிதி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டுள்ளவர் என்றும் குற்றம் சாட்டி அவரைக் கடத்தியுள்ளனர். புலிகளின் 'அலுவலகங்களில்' இக்கடத்தல் குறித்து விசாரித்த போது, "உயிருக்கு ஆபத்தில்லை!" என்று மட்டும் கூறினர்.

வணிகபீட மாணவரான மனோகரனையோ, ஆசிரியர் தில்லைநாதனையோ கடத்தியதற்கான காரணம் இதுவரை புலிகளால் அறிவிக்கப்படவில்லை. எனினும் கேசவனுடன், பல்கலைக் கழக மாணவர்களான கோவிந்தன், சிறீநிவாசன் ஆகியோர் கைது செய்யப்பட்ட பின்னர் புலிகள் யாழ் பல்கலைக்கழகத்தில் நடாத்திய 'கொள்கை' (கொலை?) விளக்கக் கூட்டத்தின் முடிவில் அவர்களை மன்னித்துவிட முடியாதா? என்ற கேள்வியை எழுப்பியவர் இந்த மனோகரனே என்பது குறிப்பிடத் தக்கது. (இது பற்றி எமது முதலாவது பிரசுரத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.)

புலிகள் தங்களின் இத்தகைய சனநாயக விரோத பாஸிஸத்தனமான நடைமுறைகளினூடாக எமது தேசத்தில் பல்வேறு துறை சார்ந்த புத்திசீவிகளையும், சனநாயகவாதிகளையும், போராளிகளையும் ஒன்றில் கொன்றோ, நாடுகடத்தியோ அல்லது சிறையிலடைத்துச் சித்திரவதை செய்தோ தம்மைப் பாதுகாத்துக்கொள்ளத் தொடர்ந்து முயன்று வருகிறார்கள். தமிழீழ விடுதலையானது புலிகளுக்கும், கரடிகளுக்கும் தான் சொந்தம் என்று புலிகள் நினைக்கிறார்கள் போலும். மனிதர்களே அற்ற ஒரு தேசத்தில், மனிதத்துவத்தின் புதைமேட்டின் மீது புலிக்கொடியை நாட்டி ஆட்சி செலுத்தும் வெறி புலிகளுக்கு இருப்பது பற்றி யாரும் பேசாமல் மௌனமாக இருப்பது எத்தனை நாளைக்கு?




உங்கள் ஒவ்வொருவருக்குமான சவக் கிடங்கையும் நீங்களே வெட்டுங்கள் எனப் புலிகள் உத்தரவிடும்வரை கேள்விகள் கேட்காமல் இருக்கப் போகிறோமா?

தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்கள் எங்கும் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய் என முழங்குவோம். புலிகளின் காட்டுமிராண்டித்தனத்தை அம்பலப்படுத்துவோம். தமிழ் மக்களின் விடுதலையில் அக்கறையுள்ள ஒவ்வொருவருடையதும் உரிமை மட்டுமல்ல, கடமையும்கூட இது.

— நண்பர்கள் (ஈழம்)

☆☆



KEDAYAM
P.B. 2480 Madras-29
S. India

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலிகளின் பாசிசம்

தம்மைத் தவிர வேறு எந்த விடுதலைப் போராட்ட அமைப்பும் ஈழத்தில் செயல்படக் கூடாது என்று அவற்றைத் தடை செய்து போராளிகளை அழித்தொழிப்பது, ஜனநாயக சக்திகளைக் 'கைது' செய்து துரோகிகள் என முத்திரை குத்தி கொன்றொழிப்பது என்பதாக புலிகளின் பாசிசம் இன்று கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு வளர்ந்து விட்டது. நேற்று ராஜினி திராணகம புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இன்று பிரபல ஈழத் தமிழ் எழுத்தாளரான கேசவன் புலிகளால் கைது செய்யப்பட்டு 'காணாமல்' போயுள்ளார். இதையொட்டி ஈழ நண்பர்கள் வெளியிட்டுள்ள துண்டறிக்கையை இங்கே பிரசுரித்துள்ளோம்.

## இரத்த சாட்சி

புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ் பல்கலைக்கழக மாணவர் விமலேஸ்வரன் (பிறப்பு: 1963; படுகொலை: 18.7.'88)

1986 இறுதியில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் புலிகளின் அராஜகத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த போது அப்போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற மாணவர் தலைவர் இவர். இப்போராட்டத்தில் முன்னணியில் நின்று செயல்பட்ட மாணவர் விஜிதரன் புலிகளால் கடத்தப்பட்டார்.

விஜிதரனை விடுதலை செய்யக் கோரியும், போராளி குழுக்களின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் மக்கள் தாம் விரும்பும் அரசியல் ஸ்தாபனங்களில் இருந்து செயல்படுவதற்கான சுதந்திரத்தை அங்கீகரிக்கக் கோரியும் விமலேஸ்வரன் தலைமையில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். போராட்டம் தொடங்கி 10-வது நாளில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் புலிகளின் சார்பாக சமரசம் பேசி, போராட்டத்தை வேறு வடிவங்களில் தொடர ஆலோசனை கூறியதன் பேரில் உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டது. ஆனால் அடுத்த சில நாட்களிலேயே இப்போராட்டத்தில் பங்கேற்ற மாணவர்களை புலிகள் மிருகத்தனமாக தாக்கினர்.

இதனால் விமலேஸ்வரன் தலைமறைவாகி கிராமப்புற பகுதியில் மக்களுடன் ஐக்கியப்பட்டு அரசியல் பணிகளைச் செய்து வந்தார். பின்னர், 'இந்திய அமைதிப்படை' (I.P.K.F.) ஈழத்தில் தனது இருப்பைப் பேணிக்கொள்ள முயன்ற போது, அப்போதிருந்த அரசியல் சூழ்நிலை தேச விடுதலைப் போராட்டம் என்ற புதிய பாய்ச்சல் நிலைக்கு முன்னேறியது. இந்த நிலையில் விமலேஸ்வரன் வெளி வந்து மீண்டும் யாழ் பல்கலைக்கழகத்தில் மாணவர்களோடு இணைந்து கல்வி கற்றுக் கொண்டே அரசியல் பணிகளில் ஈடுபட்டார்.

தமது கருத்துக்கும், ஆதிக்கத்துக்கும் உடன்படாதவர்களை எல்லாம் துரோகிகளாக முடிவு செய்துவிட்ட புலிகள் 18.7.88 அன்று மாலை விமலேஸ் வரனை சுட்டுக் கொன்றனர். இறந்து போன போது ஒரு அஞ்சலிக் கூட்டத்தைக் கூட காணமுடியாமல் போன அந்தத் தியாகியின் போர்க்குணம், நாட்டுப்பற்றும் ஜனநாயகப் பற்றும் கொண்ட போராளிகளுக்கு இன்றும் புதுரத்தம் பாய்ச்சிக் கொண்டிருக்கிறது.

புதிய ஜனநாயகம் □

## ஈழத்தில் இருந்து ஒரு கடிதம்
## தொடரும் கடத்தல்கள்......

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் பல்வேறு கருத்துகளைக் கொண்டவர்களும், தமது சுயஅபிப்பிராயங்களைப் பகிரங்கமாக வெளியிடவும் அதுபற்றி ஏனையோருடன் கலந்துரையாடவும் வாய்ப்புகள் நிலவின. இந்த நிலை படிப்படியாக மாறி இயக்கங்கள் ஆயுதரீதியாக பலம் பெறத் தொடங்கியபோது தமது இயக்கக் கருத்தே மேலோங்கவேண்டும் என்ற முனைப்பில் அபிப்பிராயபேதம் உடையோரை மிரட்டுதல், தாக்குதல் என்று உருவாகி அழித்தல்வரை வளர்ந்தது. 1986கடைசிப் பகுதிக்குப் பின்னர் வேறு கருத்து உடையோருடன் ஆயுதங்கள் மட்டுமே பேசும் என்ற நிலை உருவாகியது. போராட்டம் ஆரோக்கியமான வழியில் செல்ல வெவ்வேறு கருத்துகள் முட்டிமோதுதல், விவாதத்தினூடாகத் தெளிவு பிறத்தல் என்பன அவசியமானவை. ஆனால் எமது சூழலில் இந்த நிலை இனி உருவாகுமா என்ற கேள்வி இன்று பலர் மனதிலும் உருவாகும் வகையில் அச்சம் தரும் சம்பவங்கள் நிகழ்கின்றன. எம்மிடையே மாறுபட்ட கருத்துடையோரை அழித்தல், எமது பொது எதிரியான இலங்கை அரசுக்குப் பலம் சேர்க்குமேயன்றி எமது விடுதலைக்கு ஒருபோதும் உதவாது.

இந்நிலையில் தற்போது யாழ் நிலைமைகள் பற்றி இலங்கையில் இருந்துவந்த கடிதம் ஒன்றை அப்படியே பிரசுரிக்கிறோம். எமது சூழலில் அரசியல் ரீதியாக மாறுபட்ட கருத்துடையோர் என்பதற்காக எவராவது மிரட்டலுக்கோ, தாக்குதலுக்கோ உள்ளாகினால் அதற்குக் காரணமானோர் விடுதலைக்குக் குந்தகம் விளைவிப்பவர்கள் என்பதே எமது அபிப்பிராயமாகும். அரசியல் காரணங்களுக்காக எவர்மீதும் வன்முறையோ மிரட்டலோ பிரயோகிக்கப்படக்கூடாது என்பதை இச்சமயத்தில் வலியுறுத்த விரும்புகிறோம். விடுதலைப்புலிகள் தம்மிடமுள்ள அரசியற் கைதிகள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யவேண்டும், மனித உரிமைகட்கும், மாற்றுக் கருத்துகட்கும் புலிகள் அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

● சுவடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்